தென்மொழி இணைப்பு

துலை (அத்தோபர் - 2000)



குரல் 23

இசை 10

சிறுவர் கலை இலக்கியத் திங்களிதழ்

# தமிழ்ச்சிட்டு

## வாழ்க்கை பொது

வானமென்னும் கூரையின்கீழ்
வந்துருளும் மண்ணுலகம்!
வந்துருளும் மண்ணுலகில்
தம்பியே தம்பி - நாம்
வாழுகின்ற மக்களடா
தம்பியே தம்பி!

மக்களெனும் பேரினத்தில்
மகிழ்ந்திருப்பார் சிற்சிலபேர்!
மகிழ்ந்திருக்கும் அவரடிக்கீழ்
தம்பியே தம்பி - பலர்
மாளுவதும் கொடுமையன்றோ
தம்பியே தம்பி!

மழைபொழிந்து பயிராகும்!
மலைபோலும் நெல்விளையும்!
மழையும் பயிர்விளைவும்
தம்பியே தம்பி - எல்லா
மக்களுக்கும் பொதுவன்றோ
தம்பியே தம்பி!

உலகிருக்கும் மக்களெலாம்
உழைத்துணத்தான் வேண்டுமெனில்
உழைப்பறியார் வாழுவதோ
தம்பியே தம்பி - பலர்
உடல்வருந்தித் தாழுவதோ
தம்பியே தம்பி!

மாந்தருக்குள் வேற்றுமைகள்!
மனம்வளரா நாகரிகம்!
மனம்வளரா நிலையில் அது
தம்பியே தம்பி - வெறும்
மணல்மேடு போன்றதடா
தம்பியே தம்பி!



## காற்று !

காற்றே! உன்னைப் பெற்றது யார்?
காட்டில் மேட்டில் விட்டது யார்?
ஊற்றைப் போலப் பெருக்கெடுத்தே
உலாவப் போகும் கதை என்ன?

தேக்கம் இன்றித் திரிகின்றாய்;
தெரியா தெங்கும் நுழைகின்றாய்;
தூக்கம் என்போல் கொள்வாயோ?
தூங்கா தெங்கும் செல்வாயோ?

குழந்தைக் கண்ணில் குளிர் செய்வாய்;
குன்றைப் பிய்த்தே தூள் செய்வாய்;
பழங்கள் உலுக்கி உதிர்க்கின்றாய்!
பாட்டியைத் தள்ளிச் சிரிக்கின்றாய்?

முகிலாம் பஞ்சின் மூட்டைகளை
மேலே உருட்டிப் போகின்றாய்!
தவிக்கும் உலக உயிர்களுக்குத்
தண்ணீர் பிழிந்தே தருகின்றாய்!

உலகில் மென்மை நீயேதான்!
உலகில் வன்மை நீயேதான்!
உலகின் மூச்சே உருவற்ற
உயிரே! காற்றே! பழம் பொருளே!

பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு


குரல் : 23 , இசை : 10

தென்மொழி
துலை 2031 ( அத்தோபர் )
இதழின் இணைப்பு.

நிறுவனர்
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
**தாமரை பெருஞ்சித்திரனார்**



அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**'தென்மொழி'**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை- 601 302.
தொலைபேசி எண் : 239 0231


## அகல விழி! ஆழக்கேள்! உரக்கப்பேசு!

காந்தி காட்டிய மூன்று குரங்குகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

கண்களை மூடிக்கொண்டும், காதுகளை அடைத்துக் கொண்டும், வாயைப் பொத்திக் கொண்டுமாக அக் குரங்குகள் குந்தியிருக்கும்.

அந்தப் பொம்மைகள் நமக்கு என்ன சொல்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம் தானே.

"தீயவற்றைப் பார்க்காதே! தீயவற்றைக் கேட்காதே! தீயவற்றைப் பேசாதே!"

- இவற்றைத்தான் அந்தக் குரங்குப் பொம்மைகள் நமக்குக் குறிப்பில் உணர்த்துகின்றன.

ஆனால் உண்மையில் தீயவற்றைப் பார்க்காமலும், கேட்காமலும், பேசாமலும் நாம் இருந்திடக் கூடாது.

வீட்டில் குப்பை கூளங்களாய் இறைந்து கிடக்கிற தீயவற்றை நாம் பார்க்க முடியாது என்று கண்களை மூடிக்கொள்ள இயலாதது போலவே - குமுகத்தில் நிலவுகிற குப்பை கூளங்கள் எனும் தீயவற்றைப் பார்க்காமல் கண்களை மூடவோ, காதுகளை அடைக்கவோ, வாயைப் பொத்தவோ கூடாது.

தீயவை எவை என்பதை நாம் உணருகிற போதுதான் தீயவற்றைக் களைவது எப்படி என்று உணரமுடியும்.

முதலில் தீயவை என்பவை இக்குமுகத்தைக் கெடுப்பவை என்று வைத்துக் கொள்வோம்.

அவ்வாறு இக்குமுகத்தைக் கெடுக்கிற செயல்களை, அல்லது செய்திகளை நாம் பார்க்காமல் இருந்து விடுவதாலோ, கேட்காமல் இருந்து விடுவதாலோ, அல்லது பேசாமல் இருந்து விடுவதாலோ அந்தத் தீயவை அழிந்துவிடப் போவதில்லை.

குடும்பத்துள் நடக்கிற தீயவை என்கிற அழிவுகளைத் தடுத்து நிறுத்துகிற அக்கறை நமக்குக்

குமுகத்துள் நடக்கிற அழிவுகளை எதிர்ப்பதிலும் வேண்டும்.

சாதிவெறித் தனங்கள்வழி வரும் தீயவை, மதவெறித்தனங்களால் வரும் தீயவை, பணவெறித் தனங்களால் வரும் தீயவை, ஆளுமை வெறித்தனங்களால் வரும் தீயவை இவற்றை எல்லாம் தெரிந்து கொள்ளவும், தெரிந்து கொண்டவற்றை எதிர்த்துப் போராடி வீழ்த்தவும் நமக்குத் துணிவு வேண்டும்.

அப்படியாக நாம் செய்யாமல் போவதால்தான் தீயவை செழித்து வளர்ந்து நம்மையும், நம் குமுகத்தையும் அழிக்கிறது.

எனவே, தமிழ்க் குழந்தைகளே

தீயவற்றை எதிர்க்கவும், எதிர்த்துப் போராடவும், போராடி அழிக்கவும் நாம் பயில வேண்டும்.

அப்படியான பயிற்சிக்கு நம் அறிவுப் புலன்களை நாம் மூடிக் கொள்ளுதல் கூடாது.

அகல விழித்து நோக்கியும்,

ஆழ்ந்து கேட்டு அறியவும்,

உரக்கப் பேசி உணர்த்தவும் நாம் பழகுதல் வேண்டும்.

அறிவுதான் நமக்குத் துணிவு.

நம் அறிவுப் புலன்களை அகல விரிப்போம்!

---


தமிழ் மண்ணின் பழமொழிகள் சில . . .

- எரிவதைப் பிடுங்கினால் கொதிப்பது அடங்கும்.
- கட்டிக் கொடுத்த சோறும்,
  கற்றுக் கொடுத்த சொல்லும் எதுவரைக்கும்?
- கீரைக்குக் கழுவிய நீர் கிண்டி அவிக்கப் போதும்
- கூழுக்கும் ஆசை ; மீசைக்கும் ஆசை!
- கூழ் ஆனாலும் குளித்துக் குடி,
  கந்தையானாலும் கசக்கிக் கட்டு
- சொறிந்து தேய்க்காத எண்ணெயும் பரிந்து இடாத சோறும் பாழ்.
- நொறுங்கத் தின்றால் நூறு அகவை
- கோடைக் காற்றில் உதிரும் சருகு போல் . . .
- கடன் வாங்கிச் செலவு செய்தவனும்
  மரம் ஏறிக் கைவிட்டவனும் சரி.
- நெடுமரம் வீழ்ந்தால், நிற்கும் மரம் நெடுமரம்.

# முதலை

விலங்குக் காட்சிசாலைகளில் முதலையை நாம் பார்த்திருக்கிறோம். இது நீரில் வாழ்கிறது. வெப்ப மண்டலத்திலுள்ள ஆறுகளிலும் ஆற்றுக் கழிமுகங்களிலும் முதலைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

முதலை ஊர்வன இனத்தைச் சேர்ந்தது. முதலையில் பல வகைகள் உண்டு. தென் அமெரிக்காவில் வாழ்பவை மிகச் சிறியவை. இவை ஒரு மாத்திரி (மீட்டர்) நீளமே இருக்கும். கங்கை, நயில் முதலிய ஆறுகளின் கழிமுகப் பகுதியில் வாழும் முதலைகள் பெரியவை. இவை ஆறு மாத்திரி (மீட்டர்) வரை நீளம் உள்ளன.



முதலையின் முகம் நீண்டிருக்கும். உடலின் மேல்பகுதியில் கடினமான கொம்புப் பொருளாலாகிய செதில்கள் காணப்படும். இதன் மூக்குத் துளைகள் செவிகள் ஆகியவற்றின்மீது மெல்லிய தோல் மடிப்புகள் உள்ளன. இவற்றை இறுக மூடி மூக்கு, செவி ஆகியவற்றுள் நீர் புகுந்து விடாதபடி முதலை தடுக்கிறது. முதலை நீரில் வாழ்கிறது என்றாலும் மீனைப் போன்று நீருக்குள்ளேயே இதனால் மூச்சு உயிர்க்க இயலாது. மூச்சு விடுவதற்காக இது அடிக்கடி மேலே வரும். கண்களின் மேல் இமைகள், கீழ் இமைகள் ஆகியவை தவிர, அவற்றுக்கு அடியில் மெல்லிய இமைப் படலம் ஒன்றும் உண்டு. முதலை நீரினுள் இருக்கும்போது இப்படலத்தால் கண்களை மூடிக்கொள்கிறது. முதலைக்குக் கூரான பற்கள் உள்ளன. பிடித்த இரை தப்பி விடாமல் இறுகப் பற்றுவதற்கு இப்பற்கள் உதவுகின்றன.

முதலையின் வால் நீளமானது. நீரில் நீந்தும்போது இது துடுப்புப் போலப் பயன்படுகிறது. பெரிய இரைகளை அடித்துத் தாக்குவதற்கு வால் உதவுகிறது. முதலைக்கு நான்கு கால்கள் உள்ளன.

முதலை கூர்மையான பார்வை

யுடையது. சிறிய ஒலியையும் இது கேட்டு உணர வல்லது. வெயிலில் உடல் காய்வதென்றால் முதலைக்கு விருப்பம் அதிகம். இது நீரை விட்டு வெளியேறி, வெயிலில் படுத்துறங்கும். அப்போது சிறிய ஒலி கேட்டாலும் சரேலென நீருக்குள் பாய்ந்துவிடும்.

முதலை ஒரு புலாலுண்ணி. நீரில் நீந்திச் செல்லும் பறவைகள், மீன்கள் முதலியவற்றை இது பிடித்துத் தின்னும். நீர் குடிக்கச் செல்லும் ஆடு, மாடு, கன்று முதலிய விலங்குகளையும் மக்களையும் முதலை இழுத்துச் சென்றுவிடும். சில சமயங்களில் கரையேறி வந்து விலங்குகளை இழுத்துச் செல்வதும் உண்டு.

முதலை முட்டையிடும். அதுதான் வாழும் ஏரி, ஆறு முதலியவற்றின் கரைகளில், மணலில் பள்ளம் தோண்டி அதில் முட்டைகளை இட்டு மூடிவிடும். முட்டைகள் பொரிக்கும் வரை ஏரியின் அருகிலேயே தங்கிக் காவல் புரியும்.

அழகிய கைப்பைகள், வார்ப் பட்டைகள், காலணிகள் முதலியன செய்வதற்கு முதலையின் தோல் மிகவும் சிறந்தது. ஆண் முதலையின் மான்மதம் (கசுத்தூரி) போல் ஒரு நறுமணப் பொருள் கிடைக்கிறது. இதைப் பயன்படுத்திப் பலவகையான நறுமணப் பொருள்களைச் செய்கிறார்கள்.

## சொல்லடை விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | ல | ப் | ப | 2 தி | 4 கா | ர | ம் |
| 4 மு | கி | ல் | | ரு | ர் | | ட |
| 5 க | பா | ட் | ரு | வ | ரு | 6 தி | ட் |
| 7 னி | க | ய | மை | ண் | 9 கை | தா | 8 ப |
| ச் | 10 பு | லா | ஐ | ணா | வி | பு | க |
| சா | ய | | ண | ம | ள | | ட் |
| று | ல் | | 12 த | லை | க் | | டு |
| 11 பொ | ய் | க் | கா | ல் | கு | தி | ரை |

# வியப்பான செய்திகள் சில . . .

■ இருநூற்று ஐம்பது அயிர (கிலோ) எடை உள்ள கரடியின் குட்டி எவ்வளவு எடைதெரியுமா?

அரை அயிர (கிலோ) எடைகூட இருக்காதாம்.

இப்படிச் சென்ற இதழில் சொன்னவுடன் குழந்தைகளே நீங்கள் பெரிதும் வியப்படைந்திருப்பீர்கள்.

அப்படியாக அது ஏன் அரை அயிர (கிலோ) எடை மட்டும் இருக்கிறது தெரியுமா?

பொதுவாகக் கரடி மேழ (தை) மாதத்தில் குட்டிபோடும். இளவேனிற் காலம் வரை அது முழையிலேயே தங்கித் தன் குட்டிகளுக்குப் பாலூட்டும். இலையுதிர் காலத்தில் அதன் உடல் சேமித்துவைத்த கொழுப்பும் மற்ற ஊட்டப் பொருள்களும் அப்போது கொஞ்சங் கொஞ்சமாகக் கரைந்துவிடும். குளிர்காலத்தில் இந்தச் சேமிப்புக் குறைவு நிறைவு செய்யப்படுவதே இல்லை. ஏனெனில் தாய்க் கரடி அப்போது தண்ணீர்கூடப் பருகாது.

குளிர் மாதங்களில் தாய்க் கரடி மிகச் சிறு குட்டிகளையே ஊட்டி வளர்க்க முடிவது இந்தக் காரணத்தினால்தான். கரடிக் குட்டிகள் கன்றுகள் அளவு பெரியவையாக இருந்தால் அவற்றுக்கு நாள்தோறும் குறைந்தது அரை வாளிப் பாலாவது வேண்டும்.

இவ்வளவு பால் ஊட்டினால் தாய்க் கரடியின் சாரமெல்லாம் வெகு விரைவில் தீர்ந்துவிடும், குடும்பம் முழுவதும் மாண்டு போகும். நல்ல வேளையாக, எல்லா விலங்குகளும் தாங்கள் நடத்தும் வாழ்க்கைக்குத் தங்களை இசைவித்துக் கொள்கின்றன.

இளவேனிற்காலம் வரை கரடிக் குட்டிகள் மிக மெதுவாக வளரும். ஆனால் தாயின் முழையிலிருந்து வெயில் காய வெளியே வரத் தொடங்கும்போது அவை பல்வகை உணவுப் பொருள்களைப் பேரளவில் விழுங்கும். முந்திய ஆண்டுக் காட்டுப் பழங்கள், கிழங்குகள், எறும்புகள், புழுக்கள், முதிராப் பூச்சிகள், சுண்டெலிகள், மீன்கள் - சுருங்கச் சொன்னால் நிலம் மீண்டும் உயிர்த்தெழும் அந்த நாள்களில் எதிர்ப்படும் எல்லாமே கரடிக் குட்டிகளுக்கு உணவாகிவிடும்.

அந்தக் காலம் முதல் கரடிக் குட்டிகளுக்கு அதிக விரைவாக எடை கூடத் தொடங்கும்.

■ வாத்துகள் பொதுவாகப் புழுபூச்சிகள் நிலத்திணை மணிகள் இவற்றை எல்லாம் உண்ணும் என்றுதான் எல்லாருக்கும் தெரியும்.

ஆனால் ஆய்வு அடிப்படையில் வாத்துகளின் வயிற்றையைக் கிழித்துப் பார்த்தால் அவை புழு பூச்சிகளைத் தின்றதற்கான அடையாளத்தையே நாம் காண முடிவதில்லை.

மாறாக அவற்றின் வயிற்றில் செரிக்கப்படாத சில பூண்டுகளின் விதைகளே காணக் கிடைக்கின்றன.

அப்படியானால் வாத்துகள் புழுபூச்சிகளை உண்ணாத ஒரு நிலத்திணை உண்ணியா? அல்லது புலால் உண்ணியா?

அடுத்த இதழில் தெரிந்து கொள்வோமா?

# சுற்றுலா

## இறை. பொற்கொடி

இன்று சுற்றுலாச் செலவிற்குப் பணம் தரும் கடைசி நாள். அறிவியல் பற்றிய சுற்றுலா அது. ஐம்பது உருவா வேண்டும். முல்லையின் முகம் வாடியவாறு அப்பாவிடம் சென்று இறுதியாகக் கேட்டாள்.

"அப்பா என் பள்ளியில் அறிவியல் சுற்றுலா செல்கிறோம். ஐம்பது உருவா வேண்டும். நான் இருபது உருவா சேர்த்து வைத்துள்ளேன். இன்னும் முப்பது உருவா வேண்டும்" என்று கூறினாள்.

அப்பா: என்னிடம் காசு இல்லயம்மா! அம்மாவிடம் கேள்.

அம்மாவிடம் கேட்டாள்.

அம்மா: முப்பது உருபாவா, நான் எங்கு போவேன். உன் அப்பா தரும் காசில் குடும்பம் நடத்துவதே பெரிது. சுற்றுலா போகவில்லை என்று யார் கேட்டார்கள்! பேசாமல் போய்ப் படி. படித்தால் போதும் சுற்றுலாவெல்லாம் எதுக்கு?

முல்லைக்கு முகம்வாடிப் போனது.

பள்ளிக்குச் சென்றவள், நண்பகல் இரண்டு மணிக்குக் கடுமையான தலைவலியின் காரணத்தால் வீட்டிற்குத் திரும்பினாள்.

வீட்டிற்கு வரும் வழியில் திரைப்பட அரங்கினின்று, பக்கத்துவீட்டு அம்மாவுடன் அவள் அம்மாவும் வருவதைப் பார்த்தாள்.

அதிர்ச்சியாகிப் போனது முல்லைக்கு!

சுற்றுலாச் செலவிற்குக் காசில்லை! அம்மாவுக்குப் புதிய படம் பார்க்க மட்டும் காசு எங்கிருந்து வந்தது?!

முல்லையின் அதிர்ச்சி கண்ணீராய் வழிந்தது!

அவளின் ஏக்கம் பெருமூச்சாய்க் கரைந்தது.

# கோள்கள்

சென்றமுறை கதிரவனைப் பற்றி அறிந்து வியப்படைந்திருந்த குழலியும், எழிலும், இளங்கோவும், நம்பியும் அதைப்பற்றியே பேசிக் கொண்டனர்.

'எப்படி, பார்த்தாயா எழில், கதிரவன் எல்லாக் கோள்களையும் வெப்பத்தால் விழுங்கி விடுமாம். அதன் பிறகு உலகம் முதற்கொண்டு எல்லாக் கோள்களும் நெருப்புக் குழம்புகளாகக்கூட மாறிவிடுமாம்' என்ற குழலியிடம்,

'ஆமாம் குழலி அப்படியெல்லாம் மாற இன்னும் 500-கோடி ஆண்டுகள் ஆகலாம். ஆனால் அதற்குள் அறிவியலும் வளர்ந்து அந்நிலைக்கு மாற்று நிலையைக் கண்டறியத்தானே செய்வார்கள்'

- என்றான் எழில்.

இப்படிப் பேசிக் கொண்டிருக்கையிலேயே நம்பியின் தந்தை வந்தார், 'சரி . . . அச்சப்படாதீர்கள் .. இன்றைக்குக் கோள்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.'

கதிரவ மண்டலத்தில் உள்ள கோள்களை உள்ளகக் கோள்கள் என்றும், புறஅகக் கோள்கள் என்றும் இரண்டு நிலைப்படுத்துகிறார்கள்.

அவற்றில் உள்ளகக் கோள்கள் என்பவை நான்கு.

கதிரவனை மிகவும் நெருங்கியிருக்கும் அறிவன் (புதன்), வெள்ளி, உலகம், செவ்வாய் இவையே அந்த நான்கு கோள்களாகும்.

இந்தக் கோள்கள் எல்லாம், அதன் அமைப்பிலும், தக அமைவிலும், தட்பவெப்ப நிலையிலும் பெரும் வேறுபாடு உடையவை.

குண்டும் குழியுமாக இருக்கிற அறிவன் கோள் ஏறத்தாழ நம் நிலவைப் போன்றதாகவே இருக்கிறது.

அதை அடுத்துள்ள வெள்ளிக் கோள் முழுமையாக முகில் மூடிப் படிந்தது போல் காணப்படுகிறது. அம்முகில் அடைவில் பெரும்பாலும் கரிம வளியே (கார்பன் டை ஆக்சைடே) நிறைந்திருக்கிறதாம்.

உலகமும், செவ்வாயும் மேடு பள்ளங்களுடைய நில அமைப்பையே கொண்டனவாக உள்ளன.

இந் நான்கு கோள்களும் ஒப்பீட்டளவில் சிறியனவாகவும், கற்பாறைகளாகவும் தம் நில அமைப்பைக் கொண்டுள்ளன.

அந்நிலையில் புற அகக் கோள்கள் எந்தத் தன்மையின, அவை எப்படி யானவை என்று நாளை அறிந்து கொள்வோமா' என்றார் நம்பியின் தந்தை.

''சரிங்க ஐயா - என்றன குழந்தைகள்.

# முட்டைக் கோசு

சமையலுக்குப் பயன்படும் காய்கறிகளுள் ஒன்றுதான் முட்டைக் கோசு.

இதை ஓர் அடர்ந்த இலைத் தொகுப்பாக இருப்பதால் இலைக் கோசு என்பர்.

இதன் இனத்தைச் சார்ந்த இன்னொரு வகைக் கோசுதான் பூக்கோசு. (காலிப் பிளவர்)


இவை கடுகுக் குடும்பத்தைச் சார்ந்த காட்டுச் செடியிலிருந்து, நெடுங்காலமாகப் பயிர் செய்து, உணவுக்கு ஏற்றவாறு உண்டாக்கப்பட்டவை.

கடல் மட்டத்திலிருந்து அதிக உயரமுள்ள குளிர்ச்சியான இடங்களிலும், கடல் மட்டஅளவில் உள்ள குளிர்ந்த பகுதியிலும் இவை பயிராகின்றன.


இவை ஐரோப்பாவிலிருந்து இங்கு வந்தவை.

---

# எழுத்துகள் வழி - படங்கள்



கன்று



கொக்கு

- தமிழ்க்கனல்,
பொழில் வாய்ச்சி (பொள்ளாச்சி)

## இயற்கை அலறம்

காலையில் கூவி எங்களை எழுப்பும்
 சேவல் அண்ணே! - அதி
காலையில் எழுவ தெப்படி சொல்லு
 சேவல் அண்ணே!

கதிரவன் எழுவான் உனக்குப் பின்னே
 சேவல் அண்ணே! - செங்
கதிரவன் கீற்றாய்ச் சிவப்புக் கொண்டை
 சேவல் அண்ணே!

இயற்கை அலறம் நீதான் எமக்கு
 சேவல் அண்ணே! - இந்த
செயற்கை அலறம் செலவு வைக்கும்
 சேவல் அண்ணே!

நாளும் எம்மைக் கூவி எழுப்பும்
 சேவல் அண்ணே! - உன்
போலும் விழிப்பெ மக்கு வேண்டும்
 சேவல் அண்ணே!

* அலறம் - அலாரம்.

- புதுவை. தமிழ்நெஞ்சன்.

## அம்மாவை வணங்கு!

பாவலர் இளஞ்சித்திரன்

அம்மா அன்பின் அடையாளம்;
 அவளே யார்க்கும் முதல்தெய்வம்!
அம்மா வின்தாள் ஒருகோயில்;
 அவளடி வணங்கல் முதற்கடமை!
அவள்கைச் சோறு நமக்கமுதம்;
 அவள்வாய்ச் சொற்கள் திருமறையாம்!
அவள்கண் பார்வை நமக்கொளியாம்;
 அதுவே நமக்குக் கைவிளக்காம்!
ஈகப் பண்புக்(கு) இலக்கணமாம்;
 இலக்கிய வடிவும் அவளேதான்!
தாக மாக நமைவளர்த்தாள்;
 பத்தியம் இருந்து நமைக்காத்தாள்!
தனக்கெனப் பிறதையும் எண்ணாதாள்;
 தன்மனை, மக்கள் எண்ணிடுவாள்!
மனத்தில் ஆசை அழித்தவளாம்;
 மண்மிசை அவள்தான் அம்மாவாம்!
வாழ்த்தி வணங்குவம் அம்மாவை!
 வணங்கிப் போற்றுவம் அம்மாவை!
வாழ்த்தும் வாய்தான் அம்மாவாய்!
 வையமே வாழ்த்தும் அம்மாவை!

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 655/2000 செ.ப. (ஆர்.என்) எண்: 8119/63 தென்மொழி
டிஎன். சீப் பி.எம்.சி 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண்: 8119/63 தென்மொழி இணைப்பு.

# சொல்லடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | 4 | | |
| 4 | | | ■ | | | ■ | |
| 5 | | | | | | 6 | |
| 7 | | | | | 9 | | 8 |
| | 10 | | | | | | |
| | | ■ | | | | ■ | |
| | | ■ | 12 | | | ■ | |
| 11 | | | | | | | |

**இடமிருந்து வலம் :**

1. கோவன் பற்றிய பாவியம் (8)
3. வான்நீர் (3)
7. திருக்குறளில் ஓர் அதிகாரம் (3)
10. இறைச்சி (3)
11. நாட்டுப்புறக் கலை (8)

**மேலிருந்து கீழ்**

2. அருண மவை
4. கறுப்பு (2)
5. பாவலரேறுவின் பாடல் தொகுப்பு (5)
8. ஆரவார உரை (5)
9. சிறு விளக்கு (5)
10. சூறைக்காற்று

**கீழிருந்து மேல்**

8. படித்துப் பெறுவது
12. நெருப்பு (3)

**வலமிருந்து இடம்**

6. இராமலிங்க அடிகளார் எழுதிய நூல் (6)
8. விளம்பர அறிவிப்புத் துணி